உ

கடவுள் துணை,

1322

115

ஔவையார் அருளிச்செய்த

# நல்வழிமூல

உரை

இஃது

சரவண

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

H.H. RAJAH SERFOJI'S SARAS... THE TANJORE ... TANJORE

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

தாது - ஆடி.

கடவுள்துணை.

# ஔவையார்சரித்திரம்.

பாண்டியர்கள் அரசாட்சி செய்துக்கொண்டு வந்த மதுரையில் கடைச்சங்க மிருந்த காலத்து ஔவையார் சோழதேசத்தில் உறையூரென்னும் ஊரில ஓர்சாவடியில் ஆதியென்பவளுக்கும் பகவனென்பவருக்கும் சிரேஷ்ட புத்திரியாராய்ப்பிறந்து, அத் தாய்தந்தையர்களுக்குள் ஏற்பட்டிருந்த உறுதி மொழிப்படி பிறந்த குழந்தையைத் தாய்விட்டு நீங்க மனம்பொருமல வருந்திய போதுசொல்லிய வெண்பா.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ - முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கனாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

அதுகேட்டுத் தாய் போயினள்.

பின்பு அக்குழந்தையை அச்சேரியிலிருந்தபாணர்கள் எடுத்துவளர்க்க வளர்ந்து, இயல்பாகவே சகலகலைகளும் கற்றுணர்ந்து, தமிழ்நாட்டில கல்வியிற்சிறந்தபெண்களுள் முதன்மை பெற்றிருந்தனர்.

இவரால் செய்யப்பட்டுள்ள நூல்களாவன—விநாயகரகவல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, கல்வியொழுக்கம், அசதிக்கோவை, கனனூற்கோவை, ஞானமணிக்கோவை, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து, ஞானக்குறள், பந்தனந்தாதி, முதலியனவாம்.

மேற்சொல்லிய நீதிநூல்களில் அகாரவருக்கம் ஆகியாகச்சொல்லப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும நூல்கள் சொல்நடையும, பொருள்விளக்கமும், வாக்கியச்சுருக்கமும் பொருந்தியவைகளாயிருக்கின்றமையால்பிறதேசத்தாராலும் தங்கள் தங்கள்பாஷையில்மொழிபெயர்க்கப்பட்டுச் சிறப்படைந்திருக்கின்றன.

ஒளவையார் தம்முடைய சகோதரராகிய திருவள்ளுவநாயனாரினும புத்தி நுட்பமுள்ளவர், நான்கு வித புருஷார்த்தங்களில் திருவள்ளுவநாயனார் தர்மார்த்த காமமென்னு மூன்றையும்-௧௩௩0-குறள் வெண்பாக்களினால் சொல்லியதைக் கேட்டருளி, மோக்ஷத்தையுஞ் சேர்த்துப் புருஷார்த்த நான்கையும ஓர் வெண்பாவால் மொழிந்தருளினர்.

வெண்பா.

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்துறவைத் - தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

ஒளவையார் காலத்து ஒட்டக்கூத்தர்- புகழேந்தி, கம்பர் முதலிய தமிழ் வித்துவான்களிருந்தனரென்று தெரியவருகிறது.

ஒளவையார் கிருகஸ்தாசிரமஞ் சிறந்ததென்று மற்றவர்களுக்குப்போதித்துவந்ததேயன்றி, தாம சரீரக்கல் வலாயினும் விவாகமின்றியிருந்தனர். இவர் - ௨௱ வருஷங்களுக்கு அதிகமாகச் சீவித்திருந்ததாகச்சொல்

லுகின்றனர். ஆனகையால், அவருக்கு இயற்பெயர் மறைந்து முதியவளென்னும் பொருள்தருகிற ஔவையாரென்னும் சிறப்புப்பெயர் வழங்கிவருகின்றது.

இப்படியிருக்குங்காலத்தில் ஔவையார் ஒவ்வோர் காரியத்தின் பொருட்டுத் தனித்தனியாக் கவிகள்பாடி அநேக அற்புதங்கள் செய்துவரும் நாளில் ஒருநாள்விநாயகக்கடவுளை விரைவாகப் பூசைசெய்ய, அக்கடவுள் "வழக்கப்படி யன்றி விரைந்து பூசைசெய்வது" என்னென்றுவினவ, "சுவாமி சுந்தரமூர்த்திநாயனாரும் சேரமான் பெருமான் நாயனாரும் கைலாசத்திற்குச்செல்கின்றனர். என்னையும் அழைத்தார்கள்" என, "அவர்கள் அங்குசேர்வதற்குமுன் உன்னைச் சேர்ப்பிப்போம், இரமப்படி நீ பூசை செய்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அங்ஙனமே தாம் பூசைசெய்து முடித்தனர். உடனே விநாயகக்கடவுள் தமது துதிக்கையால எடுத்துவிடக் கைலாயத்தடைந்தனர், பின்பு வந்துசேர்ந்த அவ்விருவரும்ஔவையாரைக்கண்டு அதிசயமுற்றார்கள். அச்சமயத்தில இக்கவி ஔவையாரால் சொல்லப்பட்டதாகவழங்குகின்றது.

கட்டளைக்கலித்துறை.

மதுரமொழிநல் லுமையாள்புதல்வன் மலர்ப்பதத்தை, முதிரநினையவல லார்க்குமுண்டோ முகிலபோன் முழங்கி, அதிரநடந்திடும் யானையுந்தேரு மதன்பின் வருங், குதிரையுங்காதங்கிழவியுங்காதங்குலமன்னனே.

ஔவையார் சரித்திரம் முற்றிற்று.

கடவுள் துணை.

# நல்வழியுரை.

## நூன்முகம்.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங்கலந்துனக்கு நான்றருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா

(பதவுரை.)

கோலம்செய்—அழகுசெய்கின்ற
துங்கம்—உயர்வாகிய
கரிமுகத்து—யானை முகத்தையுடைய
தூமணியே—பரிசுத்த மணிக்கொப்பாகிய விநாயகமூர்த்தியே
உனக்கு—உமக்கு
நான்—யான்
பாலும்—பாலும்
தெளி தேனும்—தெளிந்த தேனும்
பாகும்—வெல்லப் பாகும்
பருப்பும்—பருப்பும்
இவைநாலும்— ஆகிய இந்நான்கையும்
கலந்து—கலந்து
தருவேன்--நிவேதிப் பேன்
நீ—நீர்
எனக்கு—அடியேனுக்கு
சங்கம்—புலவர் கூட்டத்திலவழங்கும்
தமிழ் மூன்றும்—முத்தமிழையும்
தா—தந்தருள்

(இதன் கருத்து) விநாயகரைப்பூசிக்கின் முத்தமிழ்ப் புலமையும் உண்டாகும் என்பதாம்,

உம்மைகள் ஐந்தில முதலில உள்ள நான்கும் எண்ணும்பொருள் மற்றையதொன்றும் முற்றும்பொருள

ஆ. மணி - உவமை ஆகுபெயர் - குவ்வுருபு இரண்டும் கொடைப்பொருள.

## நூல்.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட்செய்தவவை
மண்ணிற்பிறந்தார்க்குவைத்தபொருள்-எண்ணுங்கால
ஈதொழிய வேறிலலை யெச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல்.

(பதவுரை.)

புண்ணியம் — புண்ணியமானது
ஆம் — செய்தற்குரியது
பாவம — பாவமானது
போம — செய்தற் குரியதல்லது
போனநாள் — முற் பிறப்பிலே
செய்த அவை — செய்த அவ்விருவினைகளே
மண்ணில — பூமியில
பிறந்தார்க்கு — பிறந்தமனிதர்களுக்கு
வைத்தபொருள — (அனுபவிக்க) வைத்தபொருளாகும்
எண்ணுங்கால — ஆலோசிக்குமிடத்து
எச்சமயத்தோர் — எந்தச் சமயத்தார்
சொல்லும் - சொல்லுதலும்
ஈதொழிய — இதை அலலாமல
வேறு இல்லை — மற்றொன்றில்லை ஆகையால)
தீதொழிய — பாவம்நீங்க
நன்மைசெயல் — புண்ணியத்தைச்செய்யுங்கள்

(இ-து.) பாவம நீங்கலாகப் புண்ணியஞ் செயலவேண்டும் எ-ம.

தீ-எ-ய் — நீங்கள், ம-லை — செயல், செ-வ் — நன்மை; (vide note at the end)

சாதியிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

(பதவுரை)

சாற்றுங்கால் — சொல்லுமிடத்து
மேதினியில் — பூமியில்
சாதிஇரண்டொழிய — இரண்டுசாதிகளன்றி
வேறுஇல்லை — வேறேஇல்லை (அவை)
நீதிவழுவா — நீதிதவறாத
நெறிமுறையின் — வழியினதுமுறைமையால்
இட்டார் — இரப்போர்க்கு கொடுப்பவர்
பெரியோர் — உயர்வாகிய சாதியார்
இடாதார் — கொடாதவர்
இழிகுலத்தோர் — இழிவாகியசாதியார் என்னுமவையாம் அது)
பட்டாங்கில் — உண்மையாகியநூலில்
உள்ளபடி — இருக்கின்றவிதமாம்

(இ-ள்) நன்மார்க்கத்தினின்று இரப்போர்க்குக்கொடுப்பவரே உயர்ந்தகுலத்தார் எ-ம்.

எ-ப் — சாற்று, இட்டார், இடாதார், தோ - எ-ய் — இது, ப-லை — இல்லை, பெரியோர், இழிகுலத்தோர், உள்ளபடி, சாற்றுங்கால் என்பவை ஒருமொழியாகக்கொண்டால் செயினென்னும் வாய்பாட்டெதிர்காலவினை எச்சமாகவும், தொடர்மொழியாகக்கொள்ளின் பெயரெச்சத்தொகாநிலைத்தொடராகவும் கொள்க சாற்று-பகுதி, உ-ம், சாரியை, கால்-எதிர்கால வினைச்சவிகுதி, பகுதியீற்று றகரக்கெடும், சாரியை யீற்றுமகரத்திரியுமெச்சி

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்யென் றிராதே-இடுங்கடுக
உண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு

(பதவுரை.)

இடும்பைக்கு— துன்பங்களாகிய (நரகங்களுக்கு
இடும்— நிறைத்துவைக்கும்
பை— பையையொத்த
இயல்— தன்மையையுடைய
உடம்பு—தேகம்
இது அன்றே— இதல்லவா
இடும்—உணவையிடுகிற
பொய்யை—நிலையில்லாததை
மெய்என்று இராது—நிலையுடையதென்று நம்பியிராமல்
கடுக—விரைவாக

இடும் — (இரப்பவர்க்கு) கொடுங்கள்
உண்டாயின் — இத்தருமம் உங்களிடத்து (உண்டானல்
ஊழின்—முறைமையினால்
பெருவலி — மிகுந்தவலிமையையுடைய
நோய்—மலநோயை
விண்டாரை—நீக்கினவரை
கொண்டாடும்— மெய்ச்சிக்கொள்ளுகிற
வீடுஉண்டாகும்— முத்தி (உங்களுக்கு சித்திக்கும்

(இ-து) அறஞ்செய்யின் முத்திசித்திக்கும் எ-ம்

தோ-எ-ய்—நீங்கள், எ-ய்—வீடு, மாலே—இடும், உண்டாகும். (vide note at the end)

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால் - கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு.

(பதவுரை.)

யார்க்கும் - எவர்களுக்கும்
புண்ணியம் — புண்ணியமானது,
வந்தெய்துபோது அல்லால்—கூடியகாலத்திலல்லாமல்
எண்ணி—நினைத்து
ஒருகருமம்—ஒருதொழிலை
செய்யொண்ணாது—செய்யமுடியாது
[மற்றைக்காலத்தில்செய்யுமுயற்சிபானது]

கண் இல்லான் —குருடன்
மாங்காய்விழ—மாங்காய் விழும்படி
எறிந்த—வீசிய
மாத்திரைக்கோல் — அளவுகோலை
ஒக்கும்—ஒத்திருக்கும்
ஆங்காலம்—புண்ணியம் வந்துகூடியபோது
அவர்க்கு—அவர்களுக்கு
ஆகும் —(அத்தொழில்தானே)முடியும்

(இ-து) அறங் கைகூடாதகாலத்தில் செய்யுங்காரியமுங் கைகூடாது எ-ம்.

தோ-எ-ய்—தொழில், முயற்சி, அத்தொழில், வ-லே, ஒண்ணாது, ஒக்கும் ஆகும செ-ள்—கோல்,

உம்மை உயர்வுசிறப்போடு முற்றுப்பொருளது செய்ய என்னும் வினை எச்சத்தின் விகுதி அகரம் தொகுத்தலை எய்துபோது — வினைத்தொகை நிலைத்தொடர் ஆம் என்னும் பெயரெச்சத்தின் ஈற்றுயிர்மெய்கெட்டது-ஏ - ஈற்றசை (௪)

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா-இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தாமினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில.

(பதவுரை)

வருந்தி—வருத்தப்பட்டு
அழைத்தாலும்— அழைத்தாலும்
வாராத—வாராதவைகள்
வாரா—வாராவாம்
பொருந்துவன — வருபவைகள்
போமினென்றால்—நீங்குமினென்று கேட்டுக்கொள்ளினும்
போகா—போகாவாம்
இருந்தேங்கி— இவ்வுண்மையையறியாமல் இருந்து ஏக்கமுற்று
நெஞ்சம்புண்ணாக—மனம் புண்ணாகும்படி
நெடுந்தூரம்—நெடிய தூரத்தில்
தாமினைந்து — தாங்கள் எண்ணமிட்டு
துஞ்சுவதே — உறங்குவதே
மாந்தர்தொழில்—மனிதர் தொழிலாகும்

(இ-து) செய்தமுறைப்படி நல்வினை தீவினைப்பலன்கள் வரும் ஆகலின், தீவினைப்பயனாகிய துன்பத்திற்குக் கவலைப்படலாகாது எ-ம்.

எ-ர்—வாராத, பொருந்துவன, துஞ்சுவது, ப-லை வாரா, போகா, தொழில

உம்மை—உயர்வுசிறப்பு. வாராத—எதிர்மறைவினையாலணையும்பெயர் பொருந்துவன—உடன்வினையாலணையும்பெயர் ஏ - தேற்றம் மாந்தர்என்பது நித்திய பெருவசனமாதலாலொருமையில்வாராது

உள்ள தொழிய வொருவர்க்கொருவர்சுகங்
கொள்ளக் கிடையாக் குவலயத்தில் - வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழு முயிர்க்கு

(பதவுரை)

| | |
|---|---|
| உள்ளது— ஊழினால் உளளது | வாழும்—வாழுகிற |
| ஒழிய—தவிர | உயிர்க்கு—உயிர்களுக்கு |
| ஒருவர்க்கு—ஒருவருக்கு | வெள்ளம்—வெள்ளத்தினை யுடைய |
| ஒருவர் — மற்றொருவருடைய | கடல்—கடலிலே |
| சுகம்—இன்பம் | ஓடி — (கப்பலின்மேல்) சென்று |
| கொள்ளக்கிடையா — அனுபவிக்கக்கிடையாத | மீண்டு—திரும்பி |
| குவலயத்தில்—பூமியில் | கரையேறினால்— கரையேறினாலும் |
| உடலோடு-உடலோடுகூடி | என்—(பயன்) யாது |

(இ-ள்) பெருமுயற்சியாற் பெரும்பொருள் சம்பாதித்தாலும் ஊழின் அளவுக்கதிகமாக அநுபவித்தல் கூடாதென்பது

தோ-எ-ம்—பயன், ம-லை—என

உள்ளது—உடன்பாட்டுக்குறிப்பு வினையாலணையும் பெயர் உள் - பகுதி, து - ஒன்றன்பாற் படர்க்கை விகுதி, அ - சாரியை, ள - சந்தி, கிடையாக்குவலயம்—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடரிறுதித் தொடர் என்—என்னென்னும் வினாவினைக் குறிப்பின பகுதி (௭)

எல்லாம் படியாலு மெண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பா ராதலினா லாங்கமலநீர்போல்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு

(பதவுரை)

எல்லாம்படியாலும் — சகலவிதங்களினாலும்
எண்ணினால் — ஆலோசித்தால்
இவ்வுடம்பு — இந்தத்தேகம்
பொல்லாப்புழு — பொல்லாதபுழுக்களுக்கும்
மலிநோய் — மிகுந்த வியாதிகளுக்கும்
புன் — அற்பமாகிய
குரம்பை — சிறுவீடாக (இருக்கின்றது
நல்லார் — நல்லறிவினோர்
அறிந்திருப்பார் — இவ்வுடம்பினிழிவை அறிந்திருப்பார்கள்
ஆதலினால் — ஆகையால்
கமலநீர்போல — தாமரையிலையில்நீர்போல
பிறிந்திருப்பார் — இவ்வுடம்பில் கூடியும் கூடாமலிருப்பார்கள்
பிறர்க்கு — மற்றவருக்கு
பேசார் — சொல்லார்

(இ-து) உடம்பினிழிவை அறிந்த ஞானிகள் அதிற் பற்றற்றிருப்பார் எ-ம

எ-ய் — உடம்பு, நல்லார், ப-லை — குரம்பை, பிறிந்திருப்பார், பேசார்,

உம்மை - முற்று, ஆம் - அசை, கமலம் - முதலாகு பெயர். (எ)

ஈட்டும் பொருண் முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்-தேட்டம்
மரியாதை காணு மகிலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம்

(பதவுரை.)

மகிதலத்தீர்—பெரிதாகிய பூமியிலிருப்பவர்களே
கேண்மின்—கேளுங்கள்
ஈட்டும்—தேடுதற்குரிய
பொருள்—பொருளுக்காக (செய்கின்ற)
முயற்சி—பிரயத்தனங்கள்
எண் இறந்த ஆயினும்—அளவில்லாதன ஆயினும்
ஊழ்—(முன்செய்த) வினையானது
கூட்டும்படி அன்றி—கூட்டும் அளவில் அல்லாமல்
கூடா—சேரா
தேட்டம்—தேடத்தகுவது
மரியாதை—மரியாதையேயாம்
தனம்—அப்பொருள்
தரியாது—நிலைபெறாது

(இ-து) ஒருவன் நிலைபெறாதபொருளைத் தேடுவதினும் நிலைபெறுவதாகிய மரியாதையையே தேடல்வேண்டும் எ-ம்

தோ-எ-ய—பொருள்,தேட்டம்,தனம்,ப-லை—கூடா மரியாதை,தரியாது

உம்மை—உயர்வுசிறப்பு கூட்டும்படி. பெயரெச்சத்தொடர்நிலைத்தொடர், படி என்னும் இடைச்சொல் ஈண்டுப்பெயர்த்தன்மைப்பட்டுநின்றது, ஆய்—அசைச்சொல்,காணும் இரண்டும் முன்னிலை அசைச்சொற்கள் (அ)

ஆற்றுப் பெருக்கற் றடிசுடு மந்நாளும் அவ்வா
றூற்றுப்பெருக்கா லுலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து

(பதவுரை)

ஆற்றுப் பெருக்கு — ஆற்றினீர்ப்பெருக்கு
அற்று — வற்றி
அடி — பாதங்களை
சுடும் — சுடுகின்ற
அந்நாளும் — அக்காலத்திலும்
அவ்வாறு — அந்த ஆற்றை
ஊற்றுப்பெருக்கால் — ஊற்றுநீர்ப்பெருக்கினால்
உலகு — உலகத்தாரை
ஊட்டும் — உண்பிக்கும் (அதுபோல)
நல்லகுடிப்பிறந்தார் — நற்குடியிற்பிறந்தவர்
நல்கூர்ந்தார் ஆனாலும் — தரித்திரரானாலும்
ஏற்றவர்க்கு — (தம்மிடத்து வந்து இரப்பவர்க்கு)
இசைந்து — (கருத்து) இசைந்து
இல்லையெனமாட்டார் — இல்லையென்று சொல்லார்

இ-ள் உயர்ந்த குடியிற்பிறந்தோர் வறுமைக்காலத்தும் ஈவர் எ-ம்

எ-ப் — குடிப்பிறந்தார், ப-லை — இல்லையென மாட்டார்

ஆற்றுப்பெருக்கு - ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர், தொழிற்பண்புத் தற்கிழமைப்பொருள்; நல்லகுடி - குறிப்புப் பெயரெச்சத் தொகைநிலைத்தொடர்; ஏற்றவர் - இறந்தகால வினையாலணையும்பெயர்: ஏல், பகுதி; அர், விகுதி; ற் - இடைநிலை; அகரம் - சாரியை

லகரத்திரிபும் வகரத்தோற்றமும் சந்தி பெயருக்கு- புத னிலைதிரிந்த தொழிலாகுபெயர் உலகு - இடவாகுபெ யர் உம இரண்டும உயர்வு சிறப்பு (௨௰)

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கு மதுவழியே நாமபோ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்

(பதவுரை)

மாநிலத்தீர் — பெரியபூமி யிலுள்ளவர்களே
ஆண்டு — (இறந்த) அவ்வி டத்தில்
ஆண்டுதோறும் — வருடந் தோறும்
அழுதுபுரண்டாலும் — பு ரண்டழுதாலும்
மாண்டார் — இறந்தவர்
வருவரோ — திரும்பி வரு வாரோ (வாரார்) ஆ கையால்
வேண்டா — அவ்வழுகை)
வேண்டுவதில்லை
நமக்கும் — நமக்கும்
அதுவழியே — அம்மாண மேவழியாகும்
நாம்போம் அளவும் — யாம் இறக்குமளவும்
எமக்கு — நமக்கு
என்னென்று — யாது சம்பந் தமென்று
இட்டுஉண்டு — பிச்சை( இ டுப்புசித்து)
இரும் — கவலைதீர்ந்து (இ ருங்கள்)

(இ-து) இறந்தவர்பொருட்டு அழுகையால் வருத்த மே அன்றிச் சிறிதும் பயனின்மையால் ஐயமிட்டுண்டு கவலையற்றிருக்க வேண்டும் எ-ம்

எ-ய் — மாண்டார், தோ-எ-ய் — அழுகை, சே, மு-லே, வ ருவரோ வேண்டா, இரும் (vide note at the end)

ஒருநா ளுணவை யொழியென்ற லொழியாய்
இருநாளைக் கேலென்ற லேலாய் - ஒருநாளும்
என்னே வறியா யிடும்பைகூர் என்வயிறே
உன்னோடுவாழ்தலரிது

(பதவுரை)

இடும்பைகூர் — துன்பமிகு
தற்கு ஏதுவாகிய
என்வயிறே — என்னுடை
யவயிறே
ஒருநாள் — ஒருநாளினது
உணவை — உண்டியை
ஒழி என்றால் — விட்டிரு
வென்றால
ஒழியாய் — விட்டிராய்
இருநாளைக்கு — கிடைத்த
போது உணவை (இர
ண்டுநாட்களுக்கு)
ஏல் என்றால் — ஏற்றுக்
கொள்ளென்றால்
ஏலாய் — ஏற்றுக்கொள்
ளாய்
என்னோ — (அவ்வுண்டிக்
காகமான்படும்) வருத்
தத்தை
ஒருநாளும் — ஒரு நாளாயி
னும்
அறியாய் — தெரிந்திலாய்
(ஆகையால்)
உன்னோடு-உன்னுடன்கூடி
வாழ்தல அரிது — வாழ்தல்
அருமையாயிருக்கின்றது

(இ-ள்) வயிற்றுக்குத் திருப்திசெய்தலினும் அரிய
து பிறிதில்லை

தோ-எய் — நீ, எ-ப் — வாழ்தல், ப-லை — ஒழிப்பாய்
ஏலாய், அறியாம், அரிது, செ-ள் — உணவை, ஙோ.

கூர் என் வயிறு — வினைத்தொகை நிலைத்தொடர், வ
யிறு என்னும் பெயர்கொண்டது என்னோ — தொழிற்ப
ண்புத்தற்கிழமைப் பொருளில்வந்த ஆறும்வேற்றுமை
த்தொகைநிலைத்தொடர் - உணவு — தொழிலாகுபெ

ளர் நாளும் என்பதில் உம்மை முற்றும்மொருளில்வந்தது. நோ—முதனிலைத்தொழிற்பெயர். (கக)

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

(பதவுரை.)

ஆற்றங்கரையில் — ஆற்றங்கரையிலிருக்கின்ற.
மரமும் — விருக்ஷங்களும்
அரசு அறிய — அரசன் தெரிந்துகொள்ள
வீற்றிருந்த — பெருமையாயிருந்த
வாழ்வும் — வாழ்க்கையும்
விழும் — அழியும
அன்றே — அல்லவா (ஆகவினால்)
உழுது — உழுது பயிர் செய்து
உண்டு வாழ்வு — புசித்து வாழ்வதே
ஏற்றம் — உயர்வினதாகும்
அதற்கு — அவ்வாழ்க்கைக்கு
ஒப்புஇல்லை — சமானமில்லை
வேறு-ஓர்பணிக்கு — மற்றைத் தொழில்களுக்கெல்லாம்
பழுதுண்டு — அழிவுண்டு

(இ-து) உழுது பயிர்செய்யும் ஜீவனமே சிறந்தது எ-ம்,

எ-ப்—மரமும், வாழ்வும், வாழ்வு, ஒப்பு, பழுது, இ-லை—விழும், ஏற்றம, இல்லை, உண்டு கண்டீர் முன்னிலைப்பன்மை அசைச்சொல. (கஉ)

ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்-ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல

(பதவுரை)

அம்புவியதன்மேல் — அழகியபூமியில
ஆவாரை — வாழ்வாரை
அழிப்பார் — அழிக்கவல்லவர்
யார் — யாவர்
அது அன்றி — அதுவல்லாமல
சாவாரை — இறப்பவரை
தவிர்ப்பவர்யார் — நிறுத்த வல்லவர்யாவர்
ஓவாமல் — ஒழியாமல்
ஐயம் — பிச்சைக்கு
புகுவாரை — செல்வாரை
விலக்குவார்யார் — தடுக்க வல்லவர்யாவர்
மெய் — இஃது உண்மையாகும்

இ-ரு, ஊழால் வரும் நன்மை தீமைகளைத் தவிர்க்க வல்லவர்களில்லை எ-ம்

எ-ய் — அழிப்பர், தவிர்ப்பவர், விலக்குவார், ப-லை — யார்

ஆவார், அழிப்பர், சாவார், தவிர்ப்பவர், புகுவார், விலக்குவார், இவை வினையாலணையும் பெயர்கள் அன்றி — எதிர்மறைக்குறிப்பு வினை எச்சம். அல் - பகுதி, றி — விகுதி, லகரத்திரிபு சந்தி ஓவாமல் — எதிர்மறை தெரிநிலை வினை எச்சம ஓ-பகுதி, ஆ-எதிர்மறைவிகுதி, வகரம் சந்தி எல்லாம் ஓர்பகுதி, மல்-விகுதி, காரம் மூன்றும் அசை (௧௧)

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை - சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானமழியா
துயிர்விடுகை சால வுறும்

பதவுரை.

பிச்சைக்கு—பிச்சையெடுப்பதினும்
மூத்த—பெரிய
குடிவாழ்க்கை—குடிவாழ்க்கையானது
பேசுங்கால்—சொல்லுமிடத்து
இச்சைபலசொல்லி—பலவாகிய இச்சைகளைப் பேசி
இடித்து—நெருக்கப்பட்டு
உண்கை—உண்ணுதலாம்
சிச்சீ—சீசீ
வயிறு—வயிற்றை
வளர்க்கைக்கு—வளர்த்தற்காக
மானம்—பெருமை
அழியாது—கெடாமல்
உயிர்—உயிரை
விடுகை—விடுதல்
சாலவுறும்—மிகுந்த பயனுள்ளதாம்

இ-ள் இச்சகம்பேசிப் பெருமைகெடச் சீவனஞ் செய்வதினும் மரணமே மேலாகும் எ-ம்

எ-ய—வாழ்க்கை, விடுகை, ப-லை-உண்கை, சாலவுறும்

கு—உருபுமயக்கம் பேசுங்கால்—செயினென்னும் வாய்பாட்டு எதிர்கால வினை எச்சம், பேசு-பகுதி, கால் விகுதி, உம்- சாரியை, பகுதியீற்றுஉகரக்கேடு, சாரியையீற்று மகரத்திரிபும் சந்தி - இடித்து என்னும் செய்வினை எச்சம் செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது சிச்சீ-இகழ்ச்சிக் குறிப்புப்பொருளைத்தரும் இடை-

ச்சொல் சால - உரிச்சொலடியாகப்பிறந்த செயவெ
ன் எச்சம். ௧௪

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை - உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்

பதவுரை

சிவாயநமஎன்று — சிவபெருமானுக்கு நமஸ்காரமெனறு [து
சிந்தித்து — தியானஞ்செய்
திருப்போர்க்கு — இருப்பவர்களுக்கு
ஒருநாளும — ஒருபொழுதும்
அபாயம் — துன்பம
இலலை — இலலை
உபாயம — விதியைவெல்லுதற்கு உபாயமாகிய
இதுவே — இதுவே
மதியாகும — உண்மையாகிய ஞானமாம்
அலலாத — இந்தொழிந்த
எலலாம் — மற்ற செயல்களுக்கெலலாம்
விதியே — முன் செய்தவினையே
மதிஆய்விடும் — அறிவாய்விடும்

இ-து சிவத்தியானத்தால் அன்றி வேறொன்றால் விதியை வெலலலாகாது எ-ம்.

எ-ய் — அபாயம், இது, விதி, ப-லை — இல்லை, மதியாகும், மதியாய்விடும

உம்மை-உயர்வுசிறப்பு, ஏ-இரண்டும் தேற்றம் ௧௫

தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங் கொடையால்
கண்ணீர்மை மாருக் கருணையால் - பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி

பதவுரை

| | |
|---|---|
| தண்ணீர்—தண்ணீரானது | பெண்ணீர்மை— பெண்களின்குணமானது |
| நிலநலத்தால்—நிலத்தினதுநன்மையாலும் | கற்பு அழியா ---- கற்புநிலைகெடாத |
| தக்கோர்குணம—மேலோரதுகுணமானது | ஆற்றால் --- விதத்தினாலும் |
| கொடையால் — ஈகையாலும் | கடல சூழ்ந்த---கடலாற்சூழப்பட்ட |
| கண்ணீர்மை — கண்களின்குணமானது | வையகத்துள்----பூமியில |
| மாரு—நீங்காத | அற்புதம் ஆம் அன்று--ஆச்சரியப்படத்தக்கவையாம் என்று |
| கருணையால்— அருளாலும் | அறி--- நீ அறிந்துகொள் |

இ-து நிலத்தின் தன்மையால் நீருக்கும், கொடையால் நல்லோர்க்கும், அருளால கண்களுக்கும், கற்பால் பெண்களுக்கும் சிறப்பு உண்டாம் எ-ம்

தோ-எ-ய்---நீ,ஊ-லே---அறி

தக்கோர்---வினையாலணையும்பெயர், தகு-பகுதி, ஆர் விகுதி, பகுதி விகாரப்பட்டு இறந்தகாலம் காட்டுகின்றது, உகரக்கேடுசந்தி ஈற்றயல் ஆ-ஓ-ஆனதுசெய்யுள் வழக்கு கடல்சூழ்ந்த என்பது எழுவாய்த் தொகாநிலைத்தொடரும் ஆம் ஏ-அசை

செய்தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியம் - வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க்கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்

பதவுரை

வையத்து---பூமியில்
பாவம்---பாவத்தை
அறும்என்ன ---- அறுங்களென்றுசொல்ல
அறிந்து----அதை அறிந்து
அன்று---அக்காலத்தில்
இடார்க்கு ---- பிச்சை இடாதவர்களுக்கு
செய்ததீவினை இருக்க---செய்தபாவம்இருக்க
இன்றுதெய்வத்தை---இப்போது,கடவுளை

நொந்தக்கால் --- வெறுத்தால
இருநிதியும்---பெரியதிரவியம்
எய்த---அடைய
வருமோ---வராது
வெறும்பானை---வெறுமையாகியபானை
மேல்பொங்குமோ----அடுப்பில் வைத்து எரித்தால மேலே பொங்காது

இ-து ஒருவர் தமக்குவந்த வறுமையைக் குறித்து இவ்வறுமைக்குக் காரணமான தீவினைசெய்த தம்மையே வெறாது தெய்வத்தைநோவதினாற் பயனில்லை எ-ம்.

எ-ய்---இருநிதியம், வெறும்பானை. ப-லை---வருமோ பொங்குமோ

செய்தீவினை--இறந்தகாலவினைத்தொகை நிலைத்தொடர் நொந்தக்கால---செயின என்னும் வாய்பாட்டு எதிர்காலவினைஎச்சம் நொ - பகுதி, ந்த்-காலங் காட்டும் இடைநிலை எச்சவிகுதி து அ - சாரியை, ங்-க் - சந்தி அரும்

ஏவற்பன்மைவினைமுற்று, ஓ-இரண்டும் எதிர்மறை. ()

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றா ருகந்தா ரெனவேண்டார் - மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம்

பதவுரை

| | |
|---|---|
| பேருலகில்---பெரிய பூமியில் | மற்றோர்---பிறர் |
| பெற்றார்---பெற்றவர் | இரணம்---தம்முடம்பில் காயத்தை |
| பிறந்தார் --- உடன்பிறந்தவர் | கொடுத்தால்--- செய்வாரானால் |
| பெருநாட்டார் --- பெரிய தேசத்தார் | இடுவர்---- அவர்க்குஎல்லாம், கொடுப்பார்கள் |
| உற்றார்---சுற்றத்தார் | சரணங் கொடுத்தாலும்--- மேற்கூறியபெற்றார் முதலாயினர் அடைக்கலமடைந்தாலும |
| உகந்தார்---சிநேகர் | இடார்---கொடார் |
| என---என்று | |
| வேண்டார் ---- விரும்பாத லோயாகன் | |

இ-ள் உலோபிகள் தங்களுக்குத் தீமைசெய்யுங் கள்வர் முதலோர்க்கன்றி நன்மைசெய்யுந் தாய்தந்தையர் முதலியோர்க்கு ஈயார் எ-ம

எ-ப்---வேண்டார், ப-வி--- இடுவர், இடார்

மற்றோர் என்பதில் ஈற்றில்-ஆ ஓ ஆயிற்று உம்மை இழிவுசிறப்பு ஏ-ஈற்றசை, தேற்றம் எனினும் அமையும், தாம்-அசை

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்-போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்

பதவுரை

வயிற்றின் --- வயிற்றினது
கொடுமையால் ---- பசியாகிய கொடுமையால்
நாழி அரிசிக்கு நாம் ----- ஒருபடியரிசிக்காகநாம்
சேவித்தும் --- சேவகஞ்செய்தும்
சென்று இரந்தும் --- போய் யாசித்தும்
தெள்நீர் கடல் கடந்தும் --- தெளிவாகிய நீரையுடையகடலைக்கடந்தும்
பாவித்தும் --- ஒருவனைக்கனமாக மதித்தும்
பார் ஆண்டும் --- பூமியை அரசாட்சி செய்தும்
பாட்டு இசைத்தும் --- செல்வர்மேற் கவி பாடியும்
உடம்பை --- இவ்வுடலை
பாழின --- வீணில
போவிப்பம் --- செலுத்துகிறோம்

இ-து உயிர்க்குறுதியாகிய முத்திநெறியிற் செலுத்தாது வீணில இவ்வுடலைப்போக்கிக் காலங்கழிப்பது மிகவும் அறிவீனம் எ-ம்

எ-ய்---நாம், ப-லை--போவிப்பம், செ-ள்--உடம்பை

உம்மைகள் ஐந்தும் எண்ணுப்பொருள் - போவிப்பம்---தன்மைப்பன்மை எதிர்காலபிறவினைமுற்று, போ பகுதி, வி-பிறவினை, விகுதி-இரண்டுமோர்பகுதி, அம்-தன்மைப்பன்மை விகுதி, ப் - எதிர்கால இடைநிலை, ம் - சந்தி, குவ்வுருபு - பொருட்டுப்பொருளது' ஏ தேற்றம்

அம்பி துணையாக வாறிழிந்த வாறொக்கும்
கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம்-இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்.

பதவுரை.

கொம்மை முலை—இளமை யாகியதனங்களை
பகர்வார்—விற்கின்றவேசியரை
கொண்டாட்டம்—கொண்டாடுதல
அம்பி துணையாக—அம்பிக்கல்லானது துணையாக
ஆறு-ஆற்றில
இழிந்த ஆறு—இறங்கிய விதத்தை
ஒக்கும்—ஒப்பாகும் (அன்றியும்)
மாநிதியம்—பெரிய செல்வத்தை
போக்கி—அழித்து
வெறுமைக்கு—தரித்திரத்துக்கு
வித்தாய்விடும்—காரணமும் ஆகும் (ஆகையால்)
இம்மை மறுமைக்கு—இம்மைமறுமை இரண்டற்கும்
நன்று அன்று—நல்ல தாகாது

இ-து, வேசையுறவு இம்மை மறுமைப்பயன்களை இழப்பிக்கும்-எ-ம்,

எ-ய்—கொண்டாட்டம், ப-லை—ஒக்கும், நன்றன்று, வித்தாய்விடும், செ-ள்—ஆறு, (vide ncte at the end)

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ் சிவந்த தாமரையாள்,

பதவுரை,

சிவந்த தாமரையாள் — செந்தாமரையில் வசிக்குந் திருமகள்
வஞ்சம் இலார்க்கு — வஞ்சனையில்லாதவர்க்கு
நீரும் — நீர்வளத்தையும்
நிழலும் — மனை வளத்தையும்
நிலம் பொதியும் — நிலத்தில் நிறையும்
நெற் கட்டும் — நெற் போரையும்
பேரும் - தோற்றத்தையும்
புகழும் — கீர்த்தியையும
பெருவாழ்வும் — பேரின்ப வாழ்வையும்
ஊரும் — கிராமத்தையும்
வரும் திருவும் — வளருஞ் செல்வத்தையும்
வாழ்நாளும் — ஆயுளையும்
என்றும — எந்நாளிலும்
தரும் — தந்தருளுவாள்

இ-து, வஞ்சனையில்லார்க்குத் திருமகளருளால் எல்லாச் செல்வமும் உண்டாகும்-எ-ம்,

எ-ய் — தாமரையாள், ப-லை — தரும், செ-ள் — நீர்முதலிய,

உம்மைகள் பத்தில் முன்னையதொன்பதும் எண்ணுப்பொருள், பின்னையதொன்றும் முற்று, வாழ்நாள் வினைத்தொகை நிலைத்தொடர், குவ்வுருபு தொக்கப்பொருளது, ஈல் அசைச்சொல்,

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பார் யனுபவிப்பா
ராவிகா ளந்தப் பணம்,

பதவுரை,

பணத்தை—திரவியத்தை
பாடுபட்டுத்தேடி—பிரயாசப்பட்டுச் சம்பாதித்து,
புதைத்து வைத்து—(பூமியில்) புதைத்துவைத்து
கேடுகெட்ட—அக்கேட்டினால் (இம்மை மறுமைப்பயன்களை) இழந்த
மானிடரே கேளுங்கள்—மனிதரே கேளுங்கள்
இங்குகூடுவிட்டு—இங்கே சரீரத்தைவிட்டு
ஆவிபோயினபின்பு—உயிர் போனபின்பு
பாவிகாள்—பாவிகளே
அந்தப்பணம்—அத்திரவியத்தை
ஆர் அநுபவிப்பார்—யாவர் அநுபவிப்பார்கள்

இ-து, பிரயாசப்பட்டுச் சம்பாதித்துப் பூமியில் புதைத்துவைப்போரது பொருள் தமக்கும் பிறர்க்கும் பயன்படாத தழியும்-எ-ம்,

எ-ய்—ஆர், ப-லை—அநுபவிப்பார், செ-ள்—பணம்,

பாடு-கேடு-இவ்விரண்டும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர், ஆர் என்பது யாவரென்பதின் மரூஉ, அந்தஎன்பது அன்னென்பதின் மரூஉ, ஏ-இரக்கப்பொருளில் வந்தது, தான்-அசை,

போயின—செய்தஎன்னும் வாய்பாட்டு இறந்தகால ப்பெயரெச்சம், போ-பகுதி, ன-இறந்தகாலஇடைநிலை, இன்-சாரியை, அ-பெயரெச்சவிகுதி, உஉ

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை,

பதவுரை,

மன்று—நியாயத்தலத்தில்
ஓரம்சொன்னா—பக்ஷபா
தஞ்சொன்னவருடைய
மனை—வீட்டில்
வேதாளம் சேரும்—பேய்
கள்சேரும்
வெள்ளெருக்குப் பூக்கும்—
வெள்ளெருக்குமலரும்
பாதாளமூலிபடரும்—பா
தாளமூலியென்கிறகொ
டிபடரும்
மூதே—மூதேவியானவள்
சென்று—போய்
இருந்து—நிலைபெற்று
வாழ்வள்—வாழ்வாள்
சேடன்—பாம்புகள்
குடிபுகும்—வாசஞ் செய்
யும

இ-து, ஓரஞ் சொன்னவர் தம் குடும்பத்தோ டழிவ ர்-எ-ம்,

எ-ய், வேதாளம், வெள்ளெருக்கு-பாதாளமூலி, மூதேவி - சேடன், ப - லை—சேரும், பூக்கும் - படரும, வாழ்வள்-குடிபுகும்,

சென்றுஇருந்து என்னும்வினையெச்சம் அடுக்கு வாழ்வள் என்னும் எதிர்கால வினைமுற்றுக்கொண்ட தவ காரம் ஐந்தும் அசை, உ௩

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறிலலா வூருக் கழகுபாழ் - மாறில்
உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை,

பதவுரை,

நீறுஇல்லா—திருநீறில்லாத
நெற்றிபாழ்—நெற்றியானது பாழாகும்
நெய்இல்லா—நெய்யில்லாத
உண்டி பாழ்—போசனம் பாழாகும
ஆறுஇல்லா—நதியில்லாத
ஊருக்கு—தேசத்துக்கு
அழகுபாழ்— அழகுபாழாகும்
மாறுஇல்—மாறுபடாத
உடற் பிறப்பு இல்லா—சகோதரஇல்லாத
உடம்பு பாழ்—தேகம் பாழாகும் (இவைபோல)
மடக் கொடி—இல்லறத்திற்குத்தக்க மனைவி
இல்லாமனை—இல்லாதவீடு
பாழே—பாழானதே

இ·து, திருநீறு முதலியவற்றால் நெற்றிமுதலியன சிறப்படைதல்போல் நற்குண நற்செய்கைகளை யுடைய இல்லாளால் மனையறஞ்சி றக்கும்-எ-ம்,

எ-ய்—மனை, ப-லை—பாழ்,

பாழ்என்னும் உடன்பாட்டுப் பண்படிகள் முற்றுப் பொருள்பட நின்றன, மடக்கொடி பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை நிலைத்தொடர் ஏ-தேற்றம்,

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு,

பதவுரை,

ஆன முதலில் — தமக்குள் வருகிறபொருளில
அதிகம் — மிகவும்
செலவானால் — செலவு செய்தலால
மானம் — பெருமை
அழிந்து — கெட்டு
மதிகெட்டு — அறிவிழந்து
போனதிசை — ஓடிப் போனதிசையிலும்
எல்லார்க்கும் — யாவர்க்கு

கள்ளன் ஆய் — திருடனாகி
ஏழ்பிறப்பும் — எழுவகைப்பிறப்பிலும்
தீயன் ஆய் — தீமையையுடையவனாகி
நல்லார்க்கும் — தன்னிடத்தன்புள்ளஸ்திரீகளுக்கும்
பொல்லனாம் — பொல்லாதவனாவான
நாடு — ஆராய

இ-ள், வருவாய்க்கு மிகுதியாகச் செலவு செய்வோன் இம்மை மறுமைப்பயன்களை இழப்பான்-எ-ம்,

எ-ய்—செல்வானன், தோ-எ-ய்—நீ, ப-லை—பொல்லனாம், நாடு,

ஆன-இறந்தகாலப் பெயரெச்சம், ஆ-பகுதி, இன்-இறந்தகால இடைநிலை, முதல்குறைந்தது, அ-பெயரெச்சவிகுதி, போன என்றும் இப்படியே, உம்மை-மூன்றில் முன்னையதிரண்டும் முற்று; பின்னையது ஒன்றும் இழிவு சிறப்பு,

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்,

பதவுரை,

பசி—பசியானது
வந்திட—வந்தால்
மானம்—கண்ணியமும்
குலம்—குலமும்
கல்வி—வித்தையும்
வண்மை—இரப்போர்க்கு கொடுத்தலும்
அறிவுடைமை—ஞானமுடைத்தாயிருத்தலும்
தானம்—சற்பாத்திரத்தில தானஞ் செய்தலும கொடையும்
தவம்—தவமும்
உயர்ச்சி—உயர்வும்
தாளாண்மை—முயற்சியும்
தேனின்—தேனினது
கசிவந்த—ஊறுதல்போலத்தோன்றுகிற
சொல்லியர்மேல்—சொல்லையுடையமாதர்மேல
காமுறுதல்—ஆசைப்படுதலும
பத்தும்—ஆகியபத்தும்
பறந்து போம—விட்டோடிப்போம்

இ-து, மானமுதலிய எல்லாநன்மைகளையுங் கெடுத்தலினால பசியினுங் கொடியது இல்லை-எ-ம்,

எ-ட்—பத்தும், ஏ-லை—போம், (vide note at the end)

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும
எனையாளு மீசன செயல்,

பதவுரை,

ஒன்றை நினைக்கின்—ஒரு பொருளைப் பெறநினைத்தால்
அது ஒழிந் திட்டு—அப்பொருள்கிடையாமல்
ஒன்று ஆகும்—மற்றொரு பொருள்கிடைக்கும்
அன்றி—அல்லாமல
அதுவரினும்— அப்பொருளேகிடைத்தாலும்
வந்து எய்தும்—வந் துகிடைக்கும்
ஒன்றை—ஒருபொருளை
நினையாதமுன்—நினையாத முன்னே
வந்துநிற்பினும்—வந்து நின்றாலும்
நிற்கும—நிற்கும் இவை
எனை ஆளும்—என்னை ஆளுகின்ற
ஈசன—கடவுளது
செயல—செயலகளாம்

இ-து, வினைக்குத்தக்கபடி இன்ப துன்பங்களை யூட்டுகின்ற கடவுளது செயலினா லல்லாமல் சிவனது செயலால் நடப்பதொன்றுமில்லை-எ-ம்,

தோ-எ-ய்—இவை, ப-லே—ஈசன்செயல்,

ஒன்று—எண்ணுப்பெயர், உம்மைகளிரண்டும் இறந்தது தழுவிய எச்சவும்மை, ஒழிந்திட்டு - செய்தென்னும் வாய்ப்பாட்டிறந்த காலவினையெச்சம்; ஒழி - பகுதி, இடு-விகுதி, து-சாரியை, த்-சந்தி, சந்தியால வந்த தகரம்-டகரமாதல் விகாரம், அனைத்தும் ஓர்பகுதி, உக

ரம் வினையெச்சப்பகுதி, பகுதி டகரமிரட்டித்து இறந்தகாலங் காட்டிநின்றது. (௨௭)

உண்பது நாழி யுடுப்பது நான்கு முழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன - கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்.

(பதவுரை.)

கண்புதைந்த—(அஞ்ஞானத்தால்) குருடாயிருக்கிற
மாந்தர்—மனிதர்கள்
உண்பது—ஒருநாளைக்குஉண்ணும் உணவு
நாழி—ஒருபடியளவாம்
உடுப்பது—உடுத்தும் சீலை
நான்குமுழம்—நான்கு முழமாம்
நினைந்தெண்ணுவன—நினைத்தெண்ணும் காரியங்கள்
எண்பது கோடி—எண்பதுகோடியாம் ஆகலால
மண்ணின்—மண்ணாகிய
கலம் போல—பாத்திரம் போல
சாந்துணையும்—சாகுமளவும்
குடிவாழ்க்கை—அவர் குடிவாழ்க்கையானது
சஞ்சலமே—துன்பமே உடையது

(இ-து) கிடைத்தமட்டில் திருப்தி யடையாதவர்களுக்கு இன்பமில்லை-எ-ம்.

எ-ப்—குடிவாழ்க்கை, ப-லை—சஞ்சலமே.

உண்பது, உடுப்பது, இவ்விரண்டும் தொழிலாகுபெயர், எண்ணுவன - எதிர்கால வினையாலணையும்பெயர், மண்ணின என்பதில் இன் சாரியை, ஏ - தேற்றம், உம்மை-முற்றும்மை, (௨௮)

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்றுகூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை-சுரந்தமுதம்
கற்றா தரலபோற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர்,

(பதவுரை.)

மரம் பழுத்தால்—மரம் பழுத்திருந்தால்
வௌவாலை வா என்று கூவி—வா என்று வௌவாலைக் கூவி
இரந்து அழைப்பார்—வேண்டி அழைப்பவர்
யாவரும்—ஒருவரும்
அங்கு— அம்மரத்தருகில்
இல்லை—இலர்
கன்றுஆ—கன்றையுடைய பசு
அமுதம் சுரந்து—பாலைச் சுரந்து
தரல்போல்—கொடுப்பது போல
கரவாது—ஒளிக்காமல்
அளிப்பரேல—கொடுப்பாரானால
உலகத்தவர—உலகத்திலுள்ளார்
உற்றார்—உறவினராவர

(இ-ள்) ஈகையுடையோருக்கு யாவரும் உறவினராவர்-எ-ம்.

எ-ப்—அழைப்பார், உலகத்தவர், ப-லை—இல்லை, உற்றார்,

அங்கு—இடப்பொருள்தந்து ஏழாம் வேற்றுமைப் பொருளில்வரும் இடைச்சொல, இல்லை—எதிர்மறைக்குறிப்புப் பொதுவினைமுற்று, யாவரும் என்பதில் உம்மை முற்றுப் பொருளில்வந்தது, (உசு)

தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே-வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ விதி,

பதவுரை.

வேந்தே—அரசனே
பூந்தாமரையோன்—தாமரைப்பூவிலிருக்கின்ற பிரமனது
பொறி வழியே—எழுத்தினபடியே
முன்—முற்பிறப்பிலே
தாம்தாம்செய்த—அவரவர்செய்த
வினை—இருவினைகளை
தாமே—அவரவரே
அனுபவிப்பார்—அனுபவிப்பார்
ஒறுத்தாரை—தீங்கு செய்தவரை
என் செயலாம்—என்ன செய்யலாம்
ஊர் எல்லாம்—ஊரிலுள்ளாரெல்லாம்
ஒன்று—ஒன்றுய்க்கூடி
வெறுத்தாலும்—வெறுத்துக்கொண்டாலும்
விதி—விதியானது
போமோ—போகாது

(இ-ள்) தமக்கு ஒருவன் தீங்குசெய்தால் தாம் முன் செய்த தீவினைப்பயன் இவன் வழியாக வந்ததென்று நினைத்து அமைந்திருத்தல் வேண்டும்-எ-ம்,

எ-ய்—தாம், ப-லை—அனுபவிப்பார், போமோ, செ-ள்—வினை,

தாந்தாம் என்னும் அடுக்குத் தனிமைப்பொருட்டு, வ-இரண்டில் முன்னது பிரிநிலை பின்னது தேற்றம், பொறிமுதனிலைத் தொழிலாகுபெயர், ஊர்-இடவாகுபெயர், எல்லாம் என்பதின் ஈற்றில முற்றும்மை விகா

ரத்தால் தொக்கது, வெறுத்தாலும் என்பதின் உம்மை ஓ எதிர்மறை (௩௰)

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சால
ஒழுக்க முயர்குலத்தி னன்று-வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி,

(பதவுரை.)

இழுக்கு உடைய—குற்ற முடைய
பாட்டிற்கு—பாட்டினும்
இசை—சொற்றொடர்
சால—மிகவும்
நன்று—நல்லது
ஒழுக்கம்—நடக்கை
உயர் குலத்தின்—உயர்வா கியகுலத்திலும்
நன்று—நல்லது
வழுக்குஉடைய—போரில் தவறுதலுடைய
வீரத்தில—வீரத்தினும்
விடாநோய்—(மருந்துமு தலிய வற்றால்) தீராத நோய்
நன்று—நல்லது
பழிக்கு—நிந்தைக்கு
அஞ்சா—பயப்படாத
தாரத்தின்—மனையாளினு
தனி—தனித்திருத்தல்
நன்று—நல்லது

(இ-ள்) இலக்கணக் குற்றமுடைய பாட்டும், ஒழுக்க மில்லாத வுயர்குலமும், தவறுதலையுடைய வீரமும், கற்பில்லாத மனைவியோடு கூடிவாழ்தலும் நன்றல்ல-எ-ம்,

எ-வ—இசை, ஒழுக்கம், விடாநோய், தனி, ப-லை—நன்று,

குலத்தின், வீரத்தின், தாரத்தின் என்பவற்றின் இன்னுருபுகள் போலப் பாட்டிற்கு என்பதில குவ்வுருபெல்லைப்பொருளில் வந்தது இசை என்னுஞ் சொல்லின்

பெயர், அதனாலாகிய தொடருக்காதலால் கருவியாகு பெயர், வழி—தொழிலாகுபெயர், பட்டு—முதனிலை திரிந்த தொழிலாகுபெயர், நன்று—குறிப்பு வினைமுற்று, நல்-பகுதி, று-விகுதி, லகரத்திரிபு-சந்தி, (கக)

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்-சோறிடும்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து,

பதவுரை,

மாநிலத்தீர்—பெரிய பூமியிலுள்ளவர்களே
ஆம்—(உங்களிடத்தில்) உண்டாயிருக்கிற
செல்வம்—செல்வமானது
ஆறு இடும்-ஆறு இடுகின்ற
மடுவும் மேடும்போல—பள்ளமும்மேடும்போல
மாறிடும் — மாறிப் போம் (கெடும்)
ஏறிடும் — உயரும் (ஆதலால்)
சோறு இடும்—(இப்போர்க்கு) சோறிடுங்கள்
தண்ணீரும் வாரும்—தண்ணீரும்வாருங்கள்
தருமமே—அத்தருமமே
சார்பு ஆக—துணையாக
உள்நீர்மை—மனத்தின் தூயதன்மை
உயர்ந்துவீறும்—உயர்ந்து வளரும்

(இ-து இப்போர்க்கு ஈதலாகிய சற்கருமத்தாற் சித்தசுத்தியுண்டாகும்-எ-ம்,

தோ-எ-ய்—நீங்கள், எ-ய்—நீர்மை, ப-லை—இடும், வாரும், வீறும், செ-ள்—சோறு, தண்ணீர்,

மா—உரிச்சொல், ஆம் செல்வம—பெயரெச்சத் தொகாநிலைத்தொடர், மேடும்மடுவும் என்பவற்றில் உ

ம்மை எண்ணும்மை நீரும் என்பதி லும்மை இறந்தது தழீஇய எச்சவும்மை, ஏ-தேற்றம். (கூஉ)

வெட்டனவைமெத்தனவை வெல்லாவாம்வேழத்தில்
பட்டுருவுங்கோல்பஞ்சிற் பாயாது-நெட்டிருப்புப்
பாரைக்குநெக்குவிடா பாறைபசுமரத்தின்
வேருக்குநெக்கு விடும்,

பதவுரை,

| | |
|---|---|
| வேழத்தில் — யானையின் மேல | வெல்லா — வெல்ல மாட்டா |
| பட்டுருவும் — தைத்து உருவுகின்ற | நெடு — நீண்ட |
| கோல் — அம்பானது | இருப்புப்பாரைக்கு — இருப்பாற்செய்த பாரைக்கு |
| பஞ்சில் — பஞ்சின் மேல் | நெக்குவிடா — பிளவாத |
| பாயாது — தைக்காது (அதுபோல) | பாறை — கருங்கற்பாறையானது |
| வெட்டனவை — வலியவைகள் | பசுமரத்தின் — பச்சை மரத்தினது |
| மெத்தனவை — மெலியவைகளை | வேருக்கு — வேருக்கு |
| | நெக்கு விடும — பிளந்து போம் |

(இ-ள்) வலியோரும் காலவசத்தால் மெலியோரால் தோல்வியடைவர்-எ-று,

எ-ய் — வெட்டனவை, பாறை, ப-லை — வெல்லா, நெக்குவிடும், செ-ள் — மெத்தனவை,

வெட்டனவை, மெத்தனவை, வினையாலணையும்பெயர்கள், வெல்லா-அஃறிணைப்பலவின்பாற் படர்க்கைப் பன்மைஎதிர்மறைவினைமுற்று இருப்புப்பாரை மூன்றாம்

ருவிப்பொருளில்வந்தமூன்றாமவேற்றுமைத்தொகைநி லைத்தொடர்மொழிகுவ்வுருபுஇரண்டுமமைகைப்பொருள்

கல்லானேயானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ்சென்றங் கெதிர்கொள்வர்-இல்லானை
இல்லாளும்வேண்டாமற்றீன்றெடுத்ததாய்வேண்டாள்
செல்லாதவன்வாயிற் சொல்,

பதவுரை,

கல்லானே ஆனாலும்—படியாதவனே ஆயினும்
கைப் பொருள் ஒன்று—கையிலேபொருள் மாத்திரம்
உண்டாயின்—உண்டாயிருந்தால்
எல்லாரும்—யாவரும்
சென்று—போய்
எதிர் கொள்வர்—எதிர்கொள்வார்கள்
இல்லானை—(பொருள்) இல்லாதவனை
இல்லாளும்—மனைவியும்
வேண்டாள்—விரும்பாள்
ஈன்றுஎடுத்த—பெற்றெடுத்த
தாய்—தாயும்
வேண்டாள்—வெறுப்பாள்
அவன் வாயில்சொல்—அவன் வாயிற் பிறக்குஞ் சொல்
செல்லாது—பயன்படாது

(இ-ள்) பொருளில்லானை யாவரும் ஒருபொருளாக மதியார்-எ-று,

எ-ய்—எல்லாரும், இல்லாள், தாய், சொல், ப-லை—எதிர்கொள்வர், வேண்டாள், செல்லாது, செ-ள்—இல்லானை,

ஏ-தேற்றம், உம்மை மூன்றில முன்னது உயர்வு சிறப்பு, நடுநின்றது-முற்று, பின்னது-இழிவுசிறப்பு, கா

யென்பதின் ஈற்றில இழிவுசிறப் பும்மை விகாரத்தால் தொக்கது, ஒன்று என்பது சிறுமைப் பொருட்டு, அங்கு, மற்று-அசை, (௩௪)

பூவாதேகாய்க்கு மரமுமுளமக்களுளும
ஏவாதேநின்றுணர்வார் தாமுளரே-தூவா
விரைத்தாலுநன்றாகா வித்தெனவேபேதைக்
குரைத்தாலுந்தோன்றா துணர்வு,

பதவுரை,

பூவாதே—பூவாமலே
காய்க்கும்—காய்க்கின்ற
மரமும்—மரங்களும்
உள—உண்டு அதுபோல)
ஏவாதே நின்று—ஏவாமலேயிருந்து
உணர்வார—அறிய வல்லவர்களும்
உளர்—உண்டு
தூவா—தூவி
விரைத் தாலும்—விதைத் தாலும்
நன்றாகா—நன்றாகவிளையாத
வித்து எனவே — விதைபோலவே
பேதைக்கு—அறிவிலானுக்கு
உரைத்தாலும்—எடுத்துச் சொன்னாலும்
உணர்வு—அறிவு
தோன்றாது-உண்டாகாது

(இ-து) குறிப்பறிந்துநடப்பவரே அறிவுடையோர்-எ-ம.

எ-ய்—உணர்வார், உணர்வு, ப-லை—உளர், தோன்றாது

பூவாதே,—ஏவாதே,—இவ்வேகாரம பிரிநிலை, உளரே என்பதில, ஏ-அசை, எனவே பதில் ஏ-தேற்றம மரமும என்பதில் உம்மை இறந்தது தழீஇ, பதசேரு

உயர்சிறப்பு மக்களுளும்—இவ்வும்மை உயர்வுசிறப்பு விளைத்தாலும், உளைத்தாலு, என்பவற்றில உம்மை இழிவுசிறப்பு உணாவார என்பதில ; இறந்ததுதழீஇயதனோடு உயர்வுசிறப்பு உம்மை விகாரத்தாலதொக்கது பேதை—துணவாகுமெயா. காம்-அசை. (௩௫)

கண்டுசிப்பி வேயகதலி நாசமுறுங காலத்தில்
கொண்டகருவழிக்குங் கொள்கைபோல-ஒண்டொடி
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயல்
மாதர்மேல வைப்பார் மனம்.

(பதவுரை)

ஒண்டொடி—ஒளியாகிய வளையலை அணிந்தவளே
கண்டு—நண்டும்
சிப்பி—இப்பியும்
வேய்—மூங்கிலும்
கதலி—வாழையும்
நாசம்—அழிவை
உறுங்காலத்தில—அடையுங்காலத்தில
கொண்டகரு—தாம்பெற்ற கருப்பமே
அழிக்கும்—அழிக்கா நின்ற
கொள்கைபோல்—தன்மையைப்போல
போதம்—ஞானமும்
தனம—திரவியமும்
கலவி—வித்தையும்
பொன்ற—அழிய
வருங்காலம—வருகிறகாலத்தில
மனம்—கருத்தை
அயலமாதர்மேல்—அந்நியமாகியபெண்கள்மேலே
வைப்பார்—வைப்பார்கள

(இ-ற) பிறர்மனை நயத்தலால் ஞானமுதலிய யாவும் நாசமாகும் எ-ம். மனம்,

தொ-எ-ய்—புருடர், ப-லை—வைப்பார், செ-ள்—கண்டுசிப்பி வேய்கதலி,—போதந் தனங்கல்வி,

என்பன உம்மைத்தொகைநிலைத்தொடர்கள் போல எ
ன்பதின் வினையெச்சவிகுதி அகரமதொகுத்தல், கருள
ன்பதின்கற்றில் சேற்ற ஏகாரம் விகாரத்தாலதொக்கது

வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை - நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைப்படேல் நெஞ்சே மெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி

(பதவுரை)

வினைப்பயனை — இருவினைப்பயன்களை
வெல்வதற்கு — வெல்லுவதற்கு
வேதம்முதல் ஆம் — சுருதி முதலாகிய
அனைத்து ஆகு நூல் அகத்தும் — எல்லாமாகிய நூலகளிடத்தும்
நினைப்பு — எண்ணமே
அது என — அவ்வினைப்பயனென்று
கண்ணுறுவது — அறிவதே
அல்லால — அல்லாமல
இல்லை — வேறே இல்லை
நெஞ்சே — மனமே
கவலைபடேல — வியாகுலப்படாதே
மெய் — உண்மையாகிய
விண் உறுவார்க்கு — மூத்தி உலகத்தை அடைய விரும்புவோர்க்கு
விதி — யாதொரு கருமமும்
இல்லை — இல்லையாம்

(இ-து யாதொரு முயற்சியுமின்றி வீடொன்றையே விரும்பியிருப்பார்க்கு இன்பதுன்பங்களில்லை எ-ம்.

தோ-எ-ய்—வே, எ-ய-விதி, ப-லை—இல்லை

வினைப்பயன — பயனுக்கற்கிழமைப்பொருளில் வந்த ஆறும் வேற்றுமைத்தொகைநிலைத்தொடர் வெல்வது, தொழிற்பெயர், வெல - பகுதி, வ் - எதிர்கால இடைநி

௪௰ அ-சு பிழை, கு-புடைபெயர்ச்சியை உணர்த்தும்ப குதி- குவ்விகுதி இரண்டும் தகுதிப்பொருட்டு கவலைப் படேல் — எவரொருவரும் எதிர்மறைவினை முற்று-உறு வார் — எதிர்கால வினையாலணையும்பெயர் இல்லை இரண் டும் எதிர்மறைக்குறிப்பு வினைமுற்று

நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்றும்
அன்றென்று மாமென்று மாகாதே - நின்றநிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
தானதானவா தேடும் பொருள்.

(பதவுரை,)

நன்றென்றும் — இது, நல்லதென்றும்
தீதென்றும் — கெட்டதென்றும்
நான் என்றும் — நானென்றும்
தான் என்றும் — அவனென்றும்
அன்று என்றும் — அல்லதென்றும்
ஆமென்றும் — ஆகுமென்றும்
ஆகாது — வேற்றுமைசெய்யாமல்
நின்றநிலை — ஆதியிலயிரண்டறக்கூடி நின்றநிலை
தான் - ஆன்மாவாகியதான்
அது ஆம்- அப்பதியாகின்ற
தத்துவம ஆம — உண்மைநிலைமையாம அது
சம்பு அறுத்தா — சமபை அறுததவர்
யாக்கைக்கு - கட்டுதற்காக
தேடும பொருள — தேடுகிறபொருளானது
போனஆ — வேறின்றியொனவாறுபோலும

இ-ள்) பாசத்தால் ஆன்மாபதியின் வேறாகத்தோ ன்றினும், தற்போத ஒழிவில் அப்பதியாய் நிலைநிற்கு மென்றவாறாம் உண்மைநிலை என்க.

எ-ய்—நிலை, தோ-எய்—அது, ப-லை—தத்துவமாம் போலும்.

உம்மைகள் எண்ணும்பொருள். ஆகாது— எதிர்மறைவினையெச்சம் நிலையாக்கை இரண்டும் தொழிற்பெயர் கு-தருதிற்பொருட்டு போலும் என்னும்பயனிலை எஞ்சிநின்றது. (௩௮)

முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருவனைத்
தப்பாம றன்னுட் பெறுவனேல் - செப்பும்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு.

(பதவுரை)

முப்பது ஆம் ஆண்டு அளவில் — முப்பது வயதளவாகிய இளமைப் பருவத்தில்
மூன்று அற்று — ஆணவம் மாயை கன்மம் ஆகிய மும்மலமும் நீங்கி
ஒருவனை — ஒப்பற்ற முதற்கடவுளை
தப்பாமல — தவறாமல
தன் உள் பெறுவன் ஆயின் — தன்னுள்ளே (அநுபூதி ஞானத்தால் ஒருவன்)
அடையானே ஆயின்
காரிகையார் தங்கள் — அழகிய மாதரது
அளவே — தளர்ச்சி அளவாகவே
முலை — தனமுண்டாம் அதுபோல
மூப்பு — பின்வரும் முதுமைப்பருவத்தில்
செப்புமகலை அளவே ஆகும — அம்முதற்பொருள் அவனுக்குக் கற்ற சாத்திர ஞானத்தினளவேயாம

(இ-ள்) முப்பது வயதிலேயே பற்றற்று ஞானாசிரியனை அடுத்துக் கேட்டால் சிந்தித்தல் தெளிதலகிட்

டை கூடல் இந்நான்கும் செயலவேண்டும் எ-ம்.

தோ-எய்—அம்முதற்பொருள். ஈ-லே—ஆகும் ஆம்செய்யும் என்னும் வாய்பாட்டு எதிர்காலப்பெயரெச்சம். ஈற்றுயிர்மெய்கெட்டது மூன்று—எண்ணுகுமெனர் ஏ - இரண்டும் தேற்றம் ஆம் மூன்றுமஅசைகள், (௪௧)

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியும் - கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்,

(பதவுரை)

தேவர் குறளும—திருவள்ளுவநாயனார் திருக்குறளும

திருநான்மறை முடிவும—சிறந்த நான்கு வேதங்களின்முடிவாகிய உபநிடதங்களும

மூவர்தமிழும—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலியமூவருடைய தமிழ்ப்பதிகங்களும

முனிமொழியும — வியாசமுனிவருடைய வேதாந்தசூத்திரமும

கோவை—திருவாதவூரடிகளுடைய திருக்கோவையாரும

திருவாசகமும—திருவாசகமும

திருமூலர் சொலலும—திருமூலநாயனார்திருமந்திரமும

ஒருவாசகமென்று — ஒருபொருளைக்குறித்த வாக்கியங்களென்று

(இ-து) திருக்குறள் முதலிய நூல்களெல்லாம் வேறுவேறு வாக்கியங்களாகத் தோன்றினும் கடவுளியல்பும், உயிரியல்பும், பந்தவியல்பும், முத்தியியல்பும் ஆகிய இவைகளை யொருதன்மையாகவே யுணர்த்துமெ-ம,

தோ-எ-ம்—நீ, ப-லை—உணர்,

உம்மைகள் எண்ணும்பொருள் சொல—கருவி ஆகுபெயர் உணர்—க்குபுணர்ந்துகுன்றிய ஏவலொருமை வினைமுற்று. (௪௰)

நல்வழியுரை-முற்றிற்று,

—※—

உ

கடவுள் துணை,

# இலக்கணக்குறிப்பு.

பாட்டு—௧,

எண்ணுங்கால், செயின் என்னும் வாய்பாட்டெதிர் கால வினை எச்சம் எண் - பகுதி, கால் - வினையெச்ச விகுதி, உம் - சாரியை, பகுதியீற்று ணகரத்தோற்றமும், சாரியையீற்று மகரத்திரிபும் சந்தி இது என்பது ஈது என முதல நீண்டது, சொல் - முதனிலைத்தொழிற்பெயர் உம்மை - முற்று, செயல் - வியங்கோள் வினைமுற்று,

பா—௨,

குவ்வுருபு தகுதிப்பொருட்டு. இவனுடம்பிரண்டாமவேற்றுமை உருபும் பொருளும் தொக்கதொகைபொப்மெய் இரண்டும் குணவாகுபெயர், ஏ - இரண்டில் முன்னது வினா பின்னது ஈற்றசை ஊழின என்னும் ஐந்தாம்வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் ஏதுப்பொருட்டாய் விண்டார் என்னும் வினையாலணையும்பெயர் கொண்டது,

பா—௩,

ஆண்டு என்பது சுட்டுப்பொருளோடு ஏழாவது இடப்பொருள் தந்துநிற்கும் ஓர் இடைச்சொல், மாண்டார்—இறந்தகால வினையாலணையும்பெயர், மாள் - பகுதி, ஆர் - விகுதி, ட் - இடைநிலை, ளகரத்திரிபு சந்தி, தோறும ஏழாவது இடப்பொருள்தந்து பன்மைப்பொருளில்வ

ந்த இடைச்சொல் வேண்டா என்றதில் தவ்விகுதி தொகுத்தல், ஓ-எதிர்மறை,உம்மைகள் இரண்டில் முன்னையது உயர்வுசிறப்பு, பின்னையது இழிவுசிறப்பு,எ-ரிநிலை,

பா—௨௰,

கொண்டாட்டம்—தொழிற்பெயர் கொண்டாடு-பகுதி-பகுதியீற்றுடகரம இரட்டித்தது விரித்தல் விகாரம் அம்-தொழிற்பெயர் விகுதி, இரண்டென்னும் செவ்வெண்ணின் தொகையும், விதத்தென்னுஞ் சொல்லின் ஈற்றில இழிவுசிறப்பும்மையும் விகாரத்தாலதொக்கன மறுமை என்பதின் ஈற்றிலுள்ள உம்மைமுற்றுகுவ்வு புஇரண்டும்பனைப்பொருள்,ஆய்விடும்—செய்யுமென்னும் வாய்பாட்டுப்படர்க்கைவினைமுற்று, ஆ-பகுதி,ய் எழுத்துப்பேறு, விடு-துணிவுப்பொருளுணர்த்தும் து பகுதி,உம்-எதிர்காலங்காட்டும வினைமுற்றுவிகுதி இமை—இப்பிறப்புமறுமை—வருபிறப்பு,

பா—௨௧,

உடைமை-உடன்பாட்டுக்குறிப்புத் தொழிற்பெ காமுறுதல்—தொழிற்பெயர், காமம்என்னும்பண் பெயர் கடைக்குறையாய்உறு என்னும் வினைபகு போடுசேர்ந்ததல்என்னும்தொழிற்பெயர் விகுதிபெ றதுமானம்—காமுறுதல,—என்னும்பெயர்ச்செவ் வெணற்றிலத்தென்னுமதொகைபெற்றது உம்மை— ற்றுவந்திட என்னும செயவெனெச்சம் காரணப்பொ ருட்டாதலால இறந்தகாலங் காட்டிநின்றது.